## 1. நுண்ணினப் பொருளியல் ஓர் அறிமுகம்

**21. பொருளியல் என்றால் என்ன?**
பொருளியல் என்றால் "இல்லங்களின் நிர்வாகம்" எனப்படும்.

**22. நுண்ணியல் பொருளியல் என்றால் என்ன?**
தனிபண்டத்தின் விலை, தனி நிறுவனங்கள், தனிப்பட்ட பொருளாதாரத்தை ஆராய்வது.

**23. பண்டங்கள் என்றால் என்ன?**
மனித விருப்பங்களை பூர்த்தி செய்யும் பொருட்கள் மற்றும் பணிகளைக் குறிக்கும்.

**24. பண்டங்களை பணிகளிருந்து ஏற்படுத்துக?**
**பண்டங்கள்:** உருவ வடிவம், தொட்டு உணரக்கூடியது.
**பணிகள்:** உருவ வடிவமில்லை, உளவியல் அடிப்படையானது.

**25. பயன்பாட்டின் வகைகளை கூறுக?**
1. இடப்பயன்பாடு, 2. காலப்பயன்பாடு, 3. வடிவப் பயன்பாடு.

**26. இயல்புரை அறிவியல் என்றால் என்ன?**
உள்ளதை உள்ளவாறு கூறும் ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவுத் தொகுதி ஆகும்.

**நெறியுரை அறிவியல் என்றால் என்ன?**
எதுவா இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை விளக்கும் இயல்.

**27. பகுத்தாய்வு என்றால் என்ன?**
பொதுக் கருத்திலிருந்து தனிக் கருத்தை பெறுவது.

## 2. நுகர்வு பகுப்பாய்வு.

**21. பயன்பாட்டை வரையறு?**
மனித விருப்பதை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி.

**26. நுகர்வோர் எச்சம் காணும் முறை எழுதுக?**
நுகர்வோர் எச்சம் = தகு விலை- உண்மை விலை.
TU-(PXQ) TU=மொத்த பயன்பாடு, P=விலை, Q=பண்ட அளவு.

**22. விருப்பங்களை வகைப்படுத்துக?**
1. இன்றியமையாத விருப்பங்கள் (உணவு, உடை, இருப்பிடம்).
2. வசதிக்கான விருப்பங்கள் (டிவி, மின் விசிறி).
3. ஆடம்பர விருப்பங்கள் (நகை, கார்).

**23. நுகர்வோர் நடத்ததையின் அடிப்படையில் அணுகுமுறைகளை குறிப்பிடுக?**
1. **எண்ணளவை பயன்பாடு** - (அளத்தல்)
2. **தரவரிசை பயன்பாட்டு** - (வரிசைப்படுத்துதல்)

**25. சமநோக்கு வளைகோடுகள் என்றால் என்ன?**
இரு பண்டங்களின் அனைத்து கலவையும்,நுகர்வோருக்கு சம அளவு திருப்தியை தருமாயின் அது சமநோக்கு வளைகோடாகும்.

A. AYYAPPAN, M.A., B.Ed., PG ASST (ECONOMICS) RANIPET DISTRICT www.Padasalai.Net

27. **கிஃபன் பொருள்கள் எவை? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?**
- கேழ்வரகு, தாழ்ந்த ரக பண்டங்கள்.
- விலை குறையும்போது அவற்றை குறைவாக வாங்குவர், விலை கூடும் போது அதிகமாக வாங்குவார் (ஏழைகள்)

## 3. உற்பத்தி பகுப்பாய்வு

21. **உற்பத்தி காரணிகளை வகைப்படுத்து?**
நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு.

22. **உழைப்பு வரையறு?**
மனிதன் தன் உடல் அல்லது அறிவை பயன்படுத்தி செய்யும் வேலை ஆகும்.
(எ.கா) விவசாயி, ஆசிரியர்.

23. **உற்பத்திச் சார்பை குறிப்பிடுக?**
ஒரு நிறுவனத்தின் உள்ளீடு மற்றும் வெளியீடு தொடர்பு ஆகும்.

26. **உற்பத்தியாளர் சமநிலை அடைய நிபந்தனை யாது?**
1. **சம அளவு செலவுக்கோடு**, சம உற்பத்தி கோட்டிற்கு தொடுகோடாக அமைய வேண்டும்.
2. அப்புள்ளியில் **சம உற்பத்தி கோடுகள்** தோற்றுவாய்க் குவித்து காணப்படும்.

27. **அளிப்புக்கோடு மேல்நோக்கி செல்வதன் காரணம் என்ன?**
விலை உயர்வால் அளிப்புஅதிகரிக்கும், விலை குறைவால் அளிப்பு குறையும். இதனால் மேல் நோக்கி செல்கிறது.

A. AYYAPPAN, M.A., B.Ed., PG ASST (ECONOMICS) WALAJAPET, RANIPET DISTRICT www.Padasalai.Net

## 4. செலவு மற்றும் வருவாய் பற்றிய ஆய்வு.

21. **செலவை வரையறு?**
ஒரு பொருளை உற்பத்திச் செய்யும் போது ஏற்படுகின்ற பல்வேறு வகையான செலவுகள் உற்பத்திச் செலவாகும்.

22. **செலவு சார்பை வரையறு?**
மொத்த செலவிற்கும்,உற்பத்திக்கும் இடையே உள்ள தொடர்பினை குறிக்கும்.
**C=f(Q).**

23. **மாறாச் செலவுகள் என்றால் என்ன?**
உற்பத்தி மாற்றத்துக்கு ஏற்ப மாறுபடுவதில்லை. இச்செலவுகள் மாறாமல் நிலையாக இருக்கும்.(வாடகை).

24. **வருவாயை வரையறு?**
ஒரு விற்பனையாளர் தன் பண்ட பரிமாற்றத்தின் மூலம் ஈட்டுகின்ற பணமே வருவாய் எனப்படும்.

25. **வெளிப்படையான செலவு -வரையறு? ****
உற்பத்தி காரணிகளை வாங்க கையிலிருந்து செய்யும் செலவுகள்.
(கூலி, விளம்பர செலவு)

26. **உண்மைச் செலவு இலக்கணம் தருக?**
உழைப்பாளர்களின் துன்பங்களும், தியாகங்களுமே உண்மையான செலவு ஆகும்.

**27. மூழ்கும் செலவுகள் என்றால் என்ன? ***

- மீட்டு எடுக்க முடியாத கடந்த கால செலவுகளை குறிக்கும்.
- அமிழ்த்தப்பட்ட செலவுகள் எனப்படும்.

## 5. அங்காடி அமைப்பும் விலை நிர்ணயமும்.

21. **அங்காடி வரையறு?**
பொருளை பரிமாற்ற, வாங்குவபர் மற்றும் விற்பவரும் கூடும் இடம்.

22. **விலை ஏற்பவர் யார்?**
நிறைவு போட்டியில் இருப்பவர்கள் விலை ஏற்பவர்கள்.


23. **தூயப் போட்டியின் இன்றியமையாத பண்புகள்? ***

- எண்ணற்ற வாங்குபவர் விற்பவர்.
- ஒரே தன்மையுள்ள பண்டங்கள்.
- நிறுவன உட்புகுதல், வெளியேறுதல் தடை இல்லை.


24. **விற்பனைச் செலவு என்றால் என்ன? ***
முற்றுரிமை போட்டியில் பண்டங்களை விற்பனை அதிகரிக்க மேற்கொள்ளும் செலவுகள் ஆகும்.
(எ.கா) விளம்பரச் செலவுகள்.

25. **கீழ்காணும் நிறுவனத்தின் தேவைக்கோடு வரைக? ***

1. **நிறைவு போட்டி:**




2. **முற்றுரிமை:**




27. **உபரி சக்தி விளக்குக?**

- உத்தம அளவு உற்பத்திக்கும், உண்மை உற்பத்திக்கும் உள்ள வேறுபாடு.
- செயற்கை பற்றாக்குறை (முற்றுரிமை போட்டியில்).

## 6. பகிர்வு பற்றி ஆய்வு.

21. **பகிர்வு என்றால் என்ன?**

- நான்கு உற்பத்தி காரணிகளுக்கு வருவாய் பகிர்ந்தளிப்பதை குறிக்கும்.
- நிலம்- வாரம், உழைப்பு- கூலி, மூலதனம்- வட்டி, அமைப்பு- லாபம்.

23. **வாரம் வரையறு?**

- நிலத்தின் வெகுமதி வாரம்.
- நிலத்தை பயன்படுத்துவதற்காக குத்தகைக்காரர்,நிலச் சொந்தக்காரருக்கு வழங்கும் தொகை.

24. **பணக்கூலி மற்றும் உண்மை கூலி வேறுபடுத்துக? ***

| 1. **பணக்கூலி:** | 2. **உண்மை கூலி:** |
|---|---|
| பணமாக வழங்கப்படும் கூலி. பெயரளவு கூலி | பண்டமாகவோ,பணியாகவோ வழங்கும் கூலியை குறிக்கும். |

26. **இலாபம் என்றால் என்ன?**
- தொழில் முனைவரின் வெகுமதி.
- உற்பத்திக் காரணிகளை ஒருங்கிணைப்பதால் அமைப்பிற்கு வழங்கப்படும் வெகுமதியாகும்.

27. **நீர்மை விருப்பத்தின் பொருள் யாது? ***
மக்கள் கையில் வைத்திருக்கும் ரொக்க பணத்தை குறிக்கும்.

## 7. இந்திய பொருளாதாரம்.

21. **பொருளாதார வளர்ச்சி பொருள்?**
ஒரு நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அதிகரித்து இருப்பதை குறிக்கும்.

22. **முன்னேறிய பொருளாதரத்தின் இரண்டு இயல்புகள்?**
- உயர்ந்த நாட்டு வருமானம்,
- உயர்ந்த வாழ்க்கை தரம்

23. **இயற்கை வளங்களை பற்றி குறிப்பு வரைக?**
- ஒரு நாட்டில் இயற்கையில் இருந்து பெறப்படும் வளங்களை குறிக்கும்.
- காடு, நீர்,கனிம வளம், ஆற்றல் சக்திகள்.

24. **இந்திய பொருளாதாரத்தின் ஏதேனும் ஒரு இயல்பு? ***
1. **கலப்பு பொருளாதாரம்:**
தனியார் துறையும் அரசு துறையும் இணைந்து செயல்படுவது.

25. **புதுப்பிக்கப்படாத இயலாத ஆற்றல் வளங்கள் பொருள்?**
பயன்படுத்தினால் தீர்ந்து போகக் கூடிய வளங்களை குறிக்கும்.(புதுப்பிக்க இயலாது) நிலக்கரி, பெட்ரோல்.

26. **தொழில் நுட்பத் தெரிவு பற்றி சென்ட கூறுவது என்ன? ***
மூலதன செறிவு நுட்ப முறையில் உழைப்பாளர்கள் மிகுதியாக இருப்பதால், வேலைவாய்ப்பு குறைவு.

27. **குறைந்த தலா வருமானம் இருக்க காரணங்களாக ராவ் கூறுவது? ***
- முறையற்ற நிலயுடைமை.
- முதலீடு இன்மை.
- வேளாண்மையில் அதிக மக்கள் அழுத்தம்.

## 8. இந்திய பொருளாதாரம் விடுதலைக்கு முன்னரும் பின்னரும்.

21. **இந்தியாவின் காலனித்துவ சுரண்டலின் நிலைகள் யாவை?**
1.வணிகம் மூலதன காலம், 2.தொழில் மூலதன காலம், 3. நிதி மூலதன காலம்.

22. **விடுதலைக்கு முன் இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வகையான நில உடமை முறைகள் யாவை? ***
1.ஜமன்தாரி முறை, 2.மஹல்வாரி முறை, 3.ரயத்துவாரி முறை.

A. AYYAPPAN, M.A., B.Ed., PG ASST (ECONOMICS), WVGBHSS, WALAJAPET, RANIPET DISTRICT

**24. பசுமை புரட்சி பலவீனங்கள்?**

1. அதிக மூலதனம் தேவைப்படுதல் , 2. பருவ மழை நம்பியிருத்தல்.

**25. பத்தம் ஐந்தாண்டு திட்டத்தை நோக்கங்கள் யாவை? ***

- தலா வருவாயை இரு மடங்காக உயர்த்துதல்.
- 2012க்குல் வறுமையை 15%ஆக குறைத்தல்.

**27. மனித வளர்ச்சி குறியீட்டு எண்ணை கணக்கிடுவதும் குறியீடுகள்? ***

- 1.வாழ்நாள், 2.கல்வி,3.வாழ்க்கை தரம்.
- HDI1,2,3,4.

## 9. இந்தியாவின் மேம்பாடு அனுபவங்கள்.

**21. இந்தியப் பொருளாதாரத்தில் கட்டமைப்பு சீர்த்திருத்தத்தை செயல்படுத்த காரணம் என்ன?**

வறுமை, வேலையின்மை காரணமாக மக்கள் வாழ்க்கை தரம் பின் தங்கிய நிலைமையில் இருந்ததால்,சீர்த்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

**22. LPG-கொள்கையைச் செயல்படுத்தக் காரணம் என்ன?**

இந்தியா பொருளாதார நடவடிக்கையில் சில கட்டுப்பாடுகள் இருந்தமையால் இந்தியா LPG-கொள்கையை செயல்படுத்தியது.

**23. தனியார் மயமாக்கல் என்றால் என்ன?***

பொதுத்துறை உரிமையை,தனியாருக்கு மாற்றுவதை குறிக்கும்.

**24. முதலீட்டைத் திரும்பப் பெறுதல் வரையறு? (Disinvestment) ***

பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை, பிற தனியார் நிறுவனங்கள் அல்லது வங்கிகளுக்கு விற்பது.

**26. சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பதன் பொருள் என்ன? ****

- அந்நிய முதலீட்டை அதிகரிக்க, முக்கியமாக **FDI**-யை ஈர்த்து. நம்நாட்டில் **(GDP)** அதிகரித்தல்.
- **2000** ஏப்ரலில் உருவாக்கப்பட்டது.

**27. மத்திய, மாநில அரசுகளும் அறுவடைக்குப் பின் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் உட்கூறுகளைக் கூறுக? ***

விவசாய விளை பொருட்களின் இழப்பை குறைப்பதற்காகவும்,உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைச்சகம்.அரசு சில சட்டம் கொண்டு தரக்குறியீடு,மதிப்பு கூட்டுதல்,குளிர் பாதான கிடங்கு.

## 10. ஊரகப் பொருளாதாரம்.

**21. ஊரகப் பொருளாதாரம் வரையறு? ***

- ஊரகத்தில் வாழும் சமுதாய மக்களையும் குறிக்கும்.
- ஊரகப்பகுதியை வளர்ச்சியடைய செய்தல்.

**22. ஊரக வளர்ச்சி என்றால் என்ன?**

ஊரகப்பகுதிகளில் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதை குறிக்கும்.

**23. ஊரக ஏழ்மை வரையறு?**

கிராம பகுதிகளில் காணப்படும் வறுமையை குறிக்கும்.

**25. மறைமுக வேளாண்மை என்றால் என்ன?**

வேலையிலிருந்து சிலரை நீக்கினாலும் உற்பத்தி அளவு குறையாது.

A. AYYAPPAN, M.A., B.Ed., PG ASST (ECONOMICS) WALAJAPET, RANIPET DISTRICT www.Padasalai.Net

**26. குடிசைத் தொழில் வரையறு?**

*பாரம்பரிய முறையில் குடும்ப உறுப்பினர்கள் பரம்பரையாக பொருட்களை உற்பத்தி செய்வது குறிக்கும்.

**27. குறுங்கடன் என்றால் என்ன?**

அரசு சாரா நிறுவனங்கள்,லாப நோக்கமின்றி சிறு தொழில்களுக்கு கடன் வழங்குவது.

**29. ஊரகமின் மயமாக்கல் வரையறு?**

- கிராமப்புறங்களில் மின் வசதியை ஏற்படுத்தித் தருவதை குறிக்கும்.

## 11. தமிழ்நாட்டு பொருளாதாரம்.

**21. சாதகமான பாலின விகிதம் கொண்ட இரண்டு மாவட்டங்களை கூறுக?**

| குறைவு | | அதிகம் | |
|---|---|---|---|
| 1. தேனி | - (900 பெண்கள்) | 1. நீலகிரி | - (1041) |
| 2. தர்மபுரி | - (946 பெண்கள்) | 2. கன்னியாகுமரி | - (1031) |

**22. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வரையறு?**

ஒரு மாநிலத்தின் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.

**23. தமிழ்நாட்டுக்கு ஏற்ற நான்கு உணவுப் பெயர்கள் குறிப்பிடுக?***

நெல், நிலக்கடலை, சிறுதானியங்கள், தோட்டக்கலைப் பயிர், கரும்பு

**24. தமிழ்நாட்டில் உள்ள முக்கிய துறைமுகங்கள் யாவை?**

1. சென்னை, 2. எண்ணூர், 3. தூத்துக்குடி

**25. பாரம்பரிய சுற்றுலா என்பது என்ன?**

*சரித்தர புகழ்பெற்ற ஸ்தலங்கள், மலைப்பகுதிகள், அணைகள், போன்றவைகள்.

**26. தமிழ்நாட்டில் உள்ள அணுமின் நிலையங்கள் எவை? ****

கல்பாக்கம், கூடங்குளம்

**28. குறுங்கடன்(micro Finance) என்றால் என்ன?**

25 இலட்சத்திற்கு மிகாமல் மூலதன முதலீடுகள் கொண்ட நிறுவனங்கள்.

## 12. பொருளியலுக்கான கணித முறைகள்

**21. 62=34+4x என்றால் x இன் மதிப்பு காண்க?**

$62=34+4x$
$34+4x=62$
$4x=62-34$
$4x=28$
$=28/4$
**$x=7$**

**27. MS Word ன் முக்கிய அம்சங்கள் யாவை? ***

1. ஆவணத்தை உருவாக்க, நகலெடுக்க, திருத்தியமைக்க, வடிவமைக்க முடியும்.
2. வாக்கியங்களை இடையில் சேர்க்க, நீக்க முடியும்.
3. வடிவமைப்பினை பயன்படுத்த முடியும்.
4. பிழை திருத்தம் செய்யலாம்.

A. AYYAPPAN , M.A., B.Ed.,
PG ASST ( ECONOMICS )
GBHSS, WALAJAPET, RANIPET DISTRICT